**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C No. 108 / 2024 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 8 |

| | | |
|---|---|---|
| Name | : | பாண்டியன் |
| Father's Name | : | பிச்சைமுத்து |
| Village | : | செஞ்சேரி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | சுயதொழில் |
| Religion | : | இந்து |
| Age | : | 57 |
| ACCUSED | | ரெங்கநாதன் – ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.06.2025.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது செஞ்சேரியில் குடியிருந்து பெட்டிக்கடை வைத்து தொழில் செய்து வருகின்றேன். சாட்சி ஆனந்தன் என்பவரை எனக்கு தெரியாது. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு போலீசார் விபத்து நடந்ததற்கு மறுநாள் வந்து சம்பவ இடத்தை பார்வையிட வந்தனர். சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். இடத்தின் அமைப்பை எழுதிக்கொண்டனர். அவ்வாறு எழுதிய மகஜரில் நான் சாட்சி கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வைமகஜர் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகின்றது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

நான் B.Sc., பட்டப்படிப்பு படித்துள்ளேன். போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் வெற்றுப்பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தேனா என்றால்

வரைபடம் வரைந்த பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன். அந்த வரைபடம் என் முன்னிலையில் வரைந்தார்களா என்றால் இல்லை. ஏற்கனவே தயார் செய்து வைத்திருந்த வரைபடத்தில் என்னிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன விபரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டதினால் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சம்பவம் நடந்ததற்கு கையெழுத்து போடுமாறு போலீசார் சொன்னதால் நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். போலீசார் என்னிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள் என்றும், நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுக்கவில்லையென்றால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**